:அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 21/2006(111)

எனது இல: தா/4/3/1/14-1
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07
2008.04.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.

**அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தற்காலிக, அமைய, பதிலீட்டு ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரமாக்குதல்.**

2006.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 21/2006 இன் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் முதலாவது பந்தியையும் அப் பந்தியில் II மற்றும் IV ஆகிய உப பந்திகளையும் பின் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) பந்தி 1:

2006.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 21/2006 இல் முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள சேவைகளில் நிரந்தரப் படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ள 2006.11.01 ஆந் திகதியை 2007.07.01 எனத் திருத்தப்படுகிறது.

II ஆவது உப பிரிவு:

அங்கீகரிக்கப்பட்ட பணிற்றொகுதிக்குரிய தற்போது வெற்றிடமாக நிலவும் நிரந்தரப்பதவியில் திருப்திகரமாகவும், தொடர்ச்சியாகவும்(வேலை செய்யும்) 180 நாட்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி " 2007.06.30 " ஆந் திகதி எனத் திருத்தப்படுகிறது.

IV ஆவது உப பிரிவு:

"2002.10.01 மற்றும் 2002.10.24 ஆந் திகதிகளைக் கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைகளான 16 மற்றும் 16(I) ஆகியவற்றை வெளியிட்டதன் பின்னர் மேற்படி, அடிப்படையில் செய்யப்பட்ட நியமனமென்றால் அதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முறையான அனுமதி பெற்றிருத்தல் மற்றும் அனுமதி பெற வேண்டிய வேறு அதிகாரிகள் இருப்பின் குறித்த அனுமதியைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்" எனத் திருத்தப்படுகிறது.

02. மேலும் 2007.07.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 21/2006(1) மற்றும் 2007.11.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல :21/2006(11) ஆகியவற்றின் ஏற்பாடுகள் மேலும் மாற்றமடையாது அவ்வாறே வலுவிலிருக்கும்,

03. மேலும் இதன் பின்னர் அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிகளுக்காக நியமனங்களை மேற் கொள்ளும் போது சகல அமைச்சுக்களும், திணைக்களங்களும் உரிய சேவை பிரமாணங்களில் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை அவ்வாறே கடைப்பிடித்தல் வேண்டும்மென வலியுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு